**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

**2025 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 16 -ஆம் நாள் திங்கட்கிழமை**

**இடைக்கால மனு எண். 2/2025**
**இன்**
**அசல் வழக்கு எண். 53/2022**

சரவணன் ...... மனுதார்/வாதி

/எதிர்/

1. மாவட்ட ஆட்சியர், சிவகங்கை
2. வட்டாட்சியர், மானாமதுரை ......எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 10.06.2025 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ஹபீபுர் ரஹ்மான் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.M.துரைப்பாண்டி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

**1.** மனுதாரர் தரப்பில் கட்டளை 26 ரூல். 9 மற்றும் பிரிவு 151 உரிமையியல் விசாரணை சட்டத்தின்படி தாவா சொத்தை பார்வையிட்டு அதன் இயற்கை அமைப்பு, சொரூபநிலை நான்குமால்கள் குறித்து விரிவானதொரு அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய ஏதுவாக நீதிமன்ற வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து உத்தரவிட வேண்டும் என்று அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**2. மனு அபிடவிட்டின் சுருக்கம்:-**

மனுதாரர் தான் ஒரு மாற்றுத்திறனாளி என்றும், தாவா சொத்தில் ஆவின் பால் பூத் அமைத்து வணிகம் செய்து ஜீவனம் செய்து வருவதாகவும், ஆவின் பால் பூத் அமைத்து விற்பனை செய்ய தனக்கு செய்களத்துார் ஊராட்சி ஒன்றியத்தில் அனுமதியும் வழங்கப்பட்டுள்ளதாகவும், தாவா சொத்தில் உள்ள ஆவின் பால் பூத்திற்கு மின்இணைப்பு பெறப்பட்டு மின்கட்டணம் செலுத்தி ரசீதுகள் பெற்றுள்ளதாகவும், மின் இணைப்பை துண்டிக்கப்போவதாக மானாமதுரை உதவி மின் பொறியாளர் கொடுத்த நோட்டீசை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை

கிளையில் நீதிபேராணை மனு தாக்கல் செய்ததில் நோட்டீஸ் ரத்து செய்யப்பட்டு தனக்கு சாதகமாக உத்திரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், தாவா சொத்து வருவாய்துறைக்கு சொந்தமானது அல்ல என்றும், உண்மைக்கு மாறான சங்கதிகளை கூறி பிரதவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளனா் என்றும் தாவா சொத்தின் இயற்கை அமைப்பு பற்றி நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்த வேண்டியுள்ளதால் தாவா சொத்தின் இயற்கை அமைப்பு, சொரூபநிலை, நான்கு எல்லைகள் குறித்து விரிவானதொரு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்திட நீதிமன்ற ஆணையாளரை நியமனம் செய்ய வேண்டி மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிருரையின் சுருக்கம்:**

தாவா மனுவில் கூறியுள்ள சங்கதிகளில் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்ற யாவற்றையும் மறுக்கப்படுவதாகவும், தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு போதிய ஆவணமில்லாத சூழ்நிலையில் அனுபவத்தை நிலைநாட்ட தாவா மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவா சொத்து அரசுக்கு பாத்தியப்பட்ட சர்க்கார் புறம்போக்கு ஓடை என இருப்பதை வழக்கு தாக்கல் செய்தபோது வருவாய்துறை ஆவணங்களில் இருந்ததால் தாவா வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர் தாவா மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இம்மனுவில் மனுதாரர் தரப்பில் சாட்சிகள் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையிலான சான்றாவாணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றவாணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5. இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-**

5.1. இந்நிலையில் இவ்வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கப்பட்டு மனு சொத்தை பார்வையிட்டு அளந்து அதன் அமைப்புத்தன்மையை (physical features) தாக்கல் செய்தால் தான் இவ்வழக்கில் முறையாக முடிவு செய்ய இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

5.2. மேலும் எந்தெந்த சூழ்நிலைகளில் வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க வேண்டும் என்ற மேன்மை பொருந்திய மதுரை உயர்நீதிமன்ற வழக்கை "The Madurai Bench of Madras High Court, Dated.26.09.2019, CORAM:THE HONOURABLE MR.JUSTICE N.ANAND VENKATESH, CRP PD (MD) NO.970 OF

2012 and MP(MD) No.1 of 2012" கருத்தில் கொண்டு இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

5.3. எனவே வழக்கறிஞர் திரு.T.முத்துராமலிங்கம் அவர்களின் ஜீனியர் வழக்கறிஞர் **திருமதி.M.ரம்யா, B.A.,L.L.B.,** அவர்களை வழக்கின் வழக்கறிஞர் ஆணையாளராக நியமித்து மனுச்சொத்தை பார்வையிட்டு புலத்தணிக்கை செய்து தாவா சொத்தின் இயற்கை அமைப்பு, சொரூபநிலை, நான்கு எல்லைகள் குறித்து வரைபடத்துடன் கூடிய தெளிவான அறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

மேலும் மனுதாரர் வழக்கறிஞர் ஆணையாளர் கட்டணமாக ரூ.7,000/- இம்மனு உத்தரவு தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் வழக்கறிஞர் ஆணையர் வசம் வழங்கி அதற்குரிய ஆதாரத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக வழக்கறிஞர் திருமதி.M.ரம்யா, B.A.,L.L.B., அவர்களை இந்த வழக்கின் வழக்கறிஞர் ஆணையாளராக நியமித்து மனுச்சொத்தை பார்வையிட்டு புலத்தணிக்கை செய்து 16.07.2025ம் தேதிக்குள் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டு இம்மனு செலவுதொகையின்றி அனுமதிக்கப்படுகிறது. அழைக்க:-16.07.2025.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஜீன் 16-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.06.16 10:44:45 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் :** இல்லை

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 21.02.2009 | மனுதாரரின் மாற்றுத்திறனாளிக்கான சான்றிதழ் மற்றும் அடையாள அட்டையின் நகல் |
| ம.சா.ஆ.2 | --- | செய்களத்தூர் பஞ்சாயத்து தலைவர், மனுதாரருக்கு ஆவின் பால் பூத் அமைக்க அனுமதியளித்த சான்று |
| ம.சா.ஆ.3 | 28.09.2015 | மனுதாரருக்கு, சிவகங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட், காரைக்குடியின் பொது மேலாளர் வழங்கிய செயல்முறை ஆணை அலுவலக நகல் |
| ம.சா.ஆ.4 | 30.11.2015 | மனுதாரர் சிவகங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு டெபாசிட் செலுத்தியதற்கான ரசீதுகள் அசல் |
| ம.சா.ஆ.5 | --- | தாவா சொத்திற்கு மனுதாரர் பெயரில் செலுத்தப்பட்டுள்ள மின்கட்டண ரசீதுகள் (16 எண்ணம்) அசல் |
| ம.சா.ஆ.6 | 27.10.2017 | மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் W.P.(MD) No.19763/2017ன் உத்தரவு உண்மைநகல் |
| ம.சா.ஆ.7 | 06.06.2017 | மனுதாரர் பெயரில் ஏற்பட்டுள்ள வீட்டுவரி ரசீது நகல் |

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.06.16 10:44:54 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**District Munsif Court**

**Manamadurai**

**IA.No. 2/2025**

**in**

**OS.No.53/2022**

**<u>Order</u>**

**Dated 16.06.2025**